
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X

காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்


*Vol:8 Issue :31 July 2026*

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**
Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**
Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*



# EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# ஆசாரக் கோவை உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

## *Principles of Living Enunciated in Aasarakkovai*

**முனைவர் கோ. ஜெயஸ்ரீ,** உதவிப் பேராசிரியர், ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏனாத்தூர், காஞ்சிபுரம்

***Dr. G. JAYASHREE, Assistant Professor, Sri Sankara Arts and Science College, Enathur, Kanchipuram***

***Abstract***

*The lessons derived from life experiences serve as a guide for many. Literature, too, aims to share such life experiences with others. Didactic literature, specifically focused on imparting moral values, refines the human mind by distinguishing between right and wrong. While many ethical texts teach virtue, they also articulate principles of personal conduct. Among them, Aasarakkovai, authored by Peruvayin Mulliyar, primarily emphasizes the necessity of personal discipline. Phrases found throughout the verses—such as "the way observed by the ancients," "the path recognized by all," "the conviction of the benevolent," and "the resolve of the wise"—clarify that the ideas presented are the result of the considered experiences of learned individuals. Although the codes of conduct (aacharas) described herein are largely based on Sanskrit texts, the work delineates essential guidelines for the individual: actions to be performed and those to be avoided, the proper maintenance of a household, protocols regarding solitude, and the appropriate manner of conduct in the presence of elders or within public assemblies. In a sense, this text also functions as a manual on hygiene and sanitation, identifying and addressing the causes of disease.*

***Keywords*:** Discipline, Virtue, Education, Acharakovai, Sanskrit, Tamil

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்க்கையில் அனுபவங்கள் தரும் பாடம் பலருக்கும் வழிகாட்டுவதாக அமைகிறது. இலக்கியங்களின் நோக்கமும் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்வதாகத்தான் அமைகிறது. அறம் உணர்த்துவதையே நோக்கமாகக் கொண்ட அற இலக்கியங்களும் நல்லன இவை தீயன இவை என்று எடுத்துக்கூறி மனித மனங்களைப் பண்படுத்துகின்றன. அறநூல்கள் பலவும் அறம் உணர்த்துவதோடு தனிமனித ஒழுக்கங்களையும் எடுத்துக்கூறுகின்றன. அவற்றுள் தனிமனித ஒழுக்கத்தின் அவசியத்தை எடுத்துரைப்பதையே

முதன்மை நோக்கமாகக் கொண்டு பெருவாயின் முள்ளியார் என்பவரால் இயற்றப்பட்டது ஆசாரக்கோவை என்ற நூல். இந்நூலில் வரும் பாக்கள் பலவற்றில் முந்தையோர்கண்ட முறை, யாவரும் கண்ட நெறி, பேரளிவாளர் துணிவு, நல்லறிவாளர் துணிவு என்பன போன்ற தொடர்கள், இந்நூற் கருத்துக்கள் அறிஞர் பலர் தம் அனுபவத்தால் ஆராய்ந்து சொல்லியவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இதில் கூறப்பட்ட ஆசாரங்கள் பெரும்பான்மையும் வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்டவை என்றாலும் தனிமனிதனுக்கு செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும், வீட்டைப் பேணும் முறைமை, தனித்திருக்கக் கூடாதவர், பெரியோரிடம் நடந்துகொள்ளும் முறை, அவையில் நடந்துகொள்ளும் முறை போன்றவற்றை எடுத்துரைப்பதாக விளங்குகிறது. இந்நூல் ஒரு வகையில் நோய்க் காரணிகளைக் கண்டறிந்து நீக்கும் சுகாதார நூலாகத் திகழ்கிறது.

**திறவுச்சொற்கள்:** ஒழுக்கம், அறம், கல்வி, ஆசாரக்கோவை, சமஸ்கிருதம்,தமிழ்

**முன்னுரை**

மனித வாழ்க்கையில் அனுபவங்கள் தரும் பாடம் பலருக்கும் வழிகாட்டுவதாக அமைகிறது. இலக்கியங்களின் நோக்கமும் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்துகொள்வதாகத்தான் அமைகிறது. அறம் உணர்த்துவதையே நோக்கமாகக் கொண்ட அற இலக்கியங்களும் நல்லன இவை தீயன இவை என்று எடுத்துக்கூறி மனித மனங்களைப் பண்படுத்துகின்றன. அறம் கனியின் உட்பகுதி என்றால் அக்கனி கெட்டுப்போகாமல் தாங்கி நிற்பது தோல் அதைப்போலத்தான் அறத்திற்கு அடிப்படை நல்லொழுக்கம். திருமூலரும் “உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”(திருமந்திரம். 724) என்கிறார். உயிர் அறம் என்றால் உடல் ஒழுக்கம் எனல் பொருந்தும். நோயற்ற நல்ல உடலிலே உயிர் தங்குவதைப்போல ஒழுக்கமுடையவரிடமே அறம் நின்று நிலைக்கும். வள்ளுவரும் “புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்”(திருக்குறள். 298) என்கிறார் அகத்தூய்மைக்கு உண்மை பேசுதலும் புறத்தூய்மைக்கு நீரும் ஒழுக்கங்களாக அமைவது இங்கு நோக்கத்தக்கது. இவ்வாறு அறநூல்கள் பலவும் அறம் உணர்த்துவதோடு தனிமனித ஒழுக்கங்களையும் எடுத்துக்கூறுகின்றன. அவற்றுள் தனிமனித ஒழுக்கத்தின் அவசியத்தை எடுத்துரைப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு பெருவாயின் முள்ளியார் என்பவரால் இயற்றப்பட்டது ஆசாரக்கோவை என்ற நூல்.

“பொதுவாக அறநூல்கள் என்பவை ஒரு மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக்கொள்ளும் நெறிகள், இறுதியாக வகுத்துக்கொண்ட நடத்தைகள் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை செய்தே ஆக வேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித் தொகை”(ஜெயமோகன்) என்கிற

அடிப்படையில் ஒரு காலத்தில் ஒரு மனிதக் குழுவால் கடைபிடிக்கப்பட்டுவந்த ஆசாரங்களை(ஒழுக்கக் கோட்பாடுகளை) தொகுத்தளிக்கின்ற நூலாக ஆசாரக்கோவை திகழ்கின்றது.

“இந்நூல் வடமொழி நூல்கள் பலவற்றின் கருத்துக்கோவையாக அமைந்துள்ளன”. (சிற்பி பாலசுப்பிரமணியம், 2014:370 ) என்கிற காரணத்தால் அது ஒருசாராருக்கு மட்டுமே பொருந்தும் நூல் எனக் கருதாது. அதில் சொல்லப்பட்ட கருத்து கடைபிடிப்பார் யாவருக்கும் பயன் தரத்தக்கது என்பதை மனங்கொண்டு பார்க்க வேண்டும்.

அறம் குறித்தும், அறநூல் குறித்தும் மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர்.(திருநாவுக்கரசு, க.த. 1971:23) “அறங்கள் எதார்த்தத்தில் குறிப்பிட்ட விதமான சமூக ஒழுங்கை, உடைமை நாகரிகத்தின் ஆதிக்க ஒழுங்கைப் பேணிப் பராமரிக்க ஏற்பட்டவை என்பது முக்கிய காரணங்களில் ஒன்றாகும். அறங்கள் எல்லாம் ஆதிக்கத்திலுள்ள சக்திகளின் பச்சையான நலன்களை நிலைக்கச் செய்பவை. இவை எப்போதும் ஒடுக்குமுறைக்கான கருத்தியல் கருவிகளாகவே செயல்பட்டு வந்துள்ளன” (ராஜ்கௌதமன் 2008:9) என அறநூல்களைப் பற்றிய மாறுபட்ட கருத்து இருந்தாலும் மனித சமூகம் அனைத்திற்கும் பொதுவான ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுமை அறங்களை, ஒழுக்க விதிகளை ஏற்றுக்கொள்வதில் மனித சமூகத்திற்கு எந்த வகையிலும் பின்னடைவு ஏற்படாது. அந்த வகையில் ஆசாரக்கோவை உணர்த்தும் வாழ்வியல் நெறிகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆசாரம்**

“ஒரு மதத்தின் எல்லா நெறிகளுமே அதன் ஆசாரந்தானென்றாலும், வெளி வாழ்க்கையில் அதன் கட்டுப்பாட்டுப்படி நடந்துகொண்டு, அதில் சொல்லியிருக்கிற வெளியடையாளங்களான சின்னங்கள் முதலியவற்றை மேற்கொண்டு நடந்து காட்டுவதே ஆசாரம். ஆனால் ஆசாரம் என்பது முழுக்க வெளி விஷயந்தான் என்று நினைத்துவிட்டால் அது தப்பு. வெளி ஸமாசாரங்களாலேயே உள் ஸமாசாரங்களை, உள்ளத்தை உயர்த்திக்கொள்ள உதவுகிறதுதான் ஆசாரம்” (கணபதி ரா 1996:435-436) என்றும், “ஆசாரம் என்பதும் ஒழுக்கம் என்பதும் காரெக்டர், கான்டக்ட் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கிச் சேர்த்துக் கொடுப்பது. இது வெறுமனே *morality, ethics* என்று சொல்கிற இஹ வாழ்க்கைக்கான நன்னெறிகளாக மட்டுமில்லாமல் பர லோகத்துக்கும் உதவுவதான காரியங்களை, ஸம்ஸ்காரங்களை, சின்னங்களை, விதி நிஷேதங்களை(இன்ன செய்யலாம், இன்ன செய்யக்கூடாது என்பவற்றை)யும் சொல்கிறது”(கணபதி ரா 1996:436) என ஆசாரங்களைக் குறித்து காஞ்சிப்பெரியவர்

குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மேலும், "இதன்கண் கூறிய ஆசாரங்கள் பெரும்பான்மையும் சுக்ர ஸ்மிருதியிலுள்ளவென்னு வடநூற்புலவர் கூறுவர்.(ஆசாரக்கோவை 1971:1)

**வைகறையில் செய்ய வேண்டியவை**

"தமிழில் உள்ளமை போல இத்துணைத் தனி நீதி நூல்கள் வேறு எந்த ஒரு மொழியிலும் இல்லை எனலாம்."(புலவர் குழந்தை, 2009:முன்னுரை) அப்படிப்பட்ட அறநூல்கள் எப்படியும் வாழலாம் என்று வாழ்கிற மக்களுக்கு நடுவே இப்படி வாழ்தல் ஏற்றத்தைத் தரக்கூடியது என எடுத்துரைக்கின்றன. அவற்றுள் ஒன்றான ஆசாரக்கோவை மனிதன் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை மிகுதியாக எடுத்துரைக்கின்றது. "காலை துயிலெழல் முதல் இரவு துயிலுக்குச் செல்லும்வரை என்னென்ன செய்யவேண்டும், எவ்வாறு செய்யவேண்டுமெனக் கட்டளையிடுகிறது.(கிருட்டினன் அ 1992:352)

"வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட நெறி. (ஆ. கோ — 04)

வைகறைத் துயிலெழுதல் என்பது பொழுது விடிவதற்கு முன்பே உறக்கத்திலிருந்து விழித்தெழுவதாகும். துயிலெழுந்தவுடனேயே அன்று செய்ய வேண்டிய அறச் செயல்களையும், பொருள் திரட்டுவதற்குரிய நற்செயல்களையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிந்தனைகளே வாழ்க்கைப் பயணத்தைத் தீர்மானிக்கின்றது. எனவே அன்றாடம் செய்ய வேண்டிய அறச் செயல்களை எண்ணிப் பார்த்து சிந்தனையைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

**நல்லொழுக்க நெறிகள்**

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற." (திருக்குறள் - 34)

நல்லொழுக்கம் பெற வேண்டுமெனில் எண்ணம், வார்த்தை மற்றும் செயல்களில் நாம் பண்புடையவர்களாக இருத்தல் அவசியமாகும். எண்ணங்கள் தூய்மையாகவும் பேச்சு பண்பாட்டுடன் செயல்கள் எல்லோருக்கும் நன்மைதருவனவாகவும் அமைய வேண்டும். இதற்கு மனத்தூய்மை அவசியம் என்கிறார் வள்ளுவர். இக்கருத்தையே ஆசாரக்கோவையின் முதல்பாடல் ஒழுக்கங்களுக்கு எல்லாம் வித்தாக விளங்குபவை எவை என்பதை வரையறுக்கின்றது.

"நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோ(டு)
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து." (ஆ. கோ — 01)

எனப் பிறர் உதவியை மறவாதிருத்தல், இன்சொல் கூறல், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல், கல்வி, உலக நடையை அறிந்து அதற்கேற்பச் செயல்படுதல், அறிவுடைமை, நற்குணம்மிக்கவருடன் நட்பு கொள்ளல் என்னும் இவை எட்டும் நல்லொழுக்கத்துக்கு வித்தாக அமைவதை எடுத்துரைக்கின்றது. இந்த எட்டும் நல்லொழுக்கங்களுக்குக் காரணங்களாகும்.

**நீராடும் காலங்கள்**

இறைவனை வழிபடுவதற்கு முன்னும், தீய கனவைக் கண்ட போதும், முடி வெட்டிய போதும், உண்ணும் போதும், உறங்கி விழித்த போதும், மலம், சிறுநீர் கழித்த காலத்தும் ஐயம் இல்லாமல் நீராடல் வேண்டும். மேலும்,

"நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீத்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்தது எனினும் தலை ஒழிந்து ஆடாரே
ஆய்ந்த அறிவினவர்." (ஆ. கோ — 14)

என்ற பாடலடிகள் நீராடுங்காலத்தில் குளம் முதலிய நீர்நிலைகளில் நீந்தக் கூடாது. அந்நீரில் எச்சில் உமிழக்கூடாது. நீரை குடைந்து திளைக்கக் கூடாது. எண்ணெய் இல்லாமல் தலை காய்ந்திருந்தாலும் கழுத்து வரை நீராடக் கூடாது (தலை மூழ்கி நீராட வேண்டும்) என முத்தோர் கண்ட ஒழுக்க நெறிகளை எடுத்தியம்புகின்றது.

**உணவு உண்ணும் நெறிகள்**

உண்ணும் உணவு எளிதாக இருப்பினும் அதை முறைப்படி உண்ண வேண்டும். ஆசாரக் கோவையில் உணவு உட்கொள்ளும் முறை குறித்த 13 பாடல்கள் கிடைக்கின்றன. "கூழானாலும் குளித்துக்குடி" என்பது பழமொழி. உணவு உண்பதற்கு முன்பு நீராடி வாயைத்துடைத்து உண்ணும் கலத்தைச் சுற்றி நீர் தெளித்து உணவை உண்ண வேண்டும் என்று ஆசாரக் கோவை கூறுகின்றது. உணவு உண்ணும் முறைமை குறித்து,

"உண்ணுங்கால் நோக்கும் திசைகிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கு இரீஇ யாண்டும்
பிறிதியாது நோக்கான் உரையாது தொழுது கொண்டு
உண்க உகா அமை நன்கு." (ஆ. கோ — 20)

உணவினை உண்ணும் போது, உணவு பற்றிய கவனத்தோடு உண்ண வேண்டும். கிழக்கு முகமாக அமர்ந்து ஆடாமல் அசையாமல் நன்றாக இருந்து எங்கும் வேறொன்றையும் நோக்காது, பேசாது உண்ணும் உணவைத் தொழுது கையால் எடுத்துச் சிந்தாமல் நன்றாய் உண்ண வேண்டும். உண்ணும் போதும், பலர் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் இந்நூல் விளம்புகிறது. மேலும் இனிக்கும் உணவு வகைகளை முதலிலும், பிற சுவையுடைய உணவுகளை இடையிலும் கசப்புச்சுவையுடைய உணவுகளை முடிவிலும் உண்பதே முறையாகும்.

"முன்துவ்வார் முன்னெழார் மிக்குறார் ஊணின்கண்
என்பெறினும் ஆற்ற வலமிரார் — தம்மின்
பெரியார் தம்பால் இருந்தக்கால்" (ஆ. கோ — 24)

நம்மைவிடப் பெரியவர்களோடு அமர்ந்து உண்ணும் போது அவர்கள் உண்ணத் தொடங்கும் முன் நாம் உண்ணக் கூடாது. அவர் உண்டு முடிக்கும் வரை நாம் பந்தியை விட்டு எழக்கூடாது. அவரைத் தொட்டுக் கொண்டு அமரக்கூடாது. எவ்வளவு பெரிய செல்வம் கிடைப்பதாக இருந்தாலும் அவருக்கு வலமாக உண்ணக் கூடாது என்றெல்லாம் உண்ணும் முறை குறித்து விளக்குகிறது.

**உடுத்தும் முறைகள்**

"உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத்து உண்ணார்
உடுத்தாடை நீருள் பிழியார்
முந்தையோர் கண்ட முறை."(ஆ. கோ — 11)

என்று ஆசாரக் கோவை உடம்பில் துணி உடுத்தி நீராடுதல் வேண்டும். ஒரு ஆடை மட்டும் உடுத்திய நிலையில் உண்ணுதல் கூடாது. தாம் உடுத்திய ஆடையை நீரில் பிழியக் கூடாது.

ஒரேயொரு ஆடை மட்டும் உடுத்தி அவைக்குச் செல்லுதல் கூடாது. இவையெல்லாம் முந்தையோர் கண்ட நெறிமுறைகளாகும் என்று குறிப்பிடுகின்றது.

"ஆடையில்லா மனிதன் அரைமனிதன்" என்ற பழமொழி ஒன்று உண்டு. மனிதனின் பண்பு அவன் உடுத்தியிருக்கும் ஆடைப்பாங்கிலே புலப்படும் எத்துணை வறுமையிருந்தாலும் அழுக்கான ஆடையை மேலே போர்த்திக் கொள்ளவோ, உடுத்திக் கொள்ளவோக் கூடாது. என்பதை,

"பலரிடை ஆடை உதிராரே என்றும்
கடனறி காட்சி யவர்" (ஆ. கோ — 36)

என ஆசாரக்கோவை குறிப்பிடுகின்றது.

**சான்றோரை வணங்கும் நெறிகள்**

அரசன், ஆசிரியர், தாய், தந்தை, தமையன் என இவர்களைத் தேவர்கள் போல வணங்க வேண்டும். இதனை,

"அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர் இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக" (ஆ. கோ — 16)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். சான்றோரைக் கண்டவிடத்து எண்சாண் உடம்பும் நிலத்தில் படியுபும்படி வீழ்ந்து வணங்க வேண்டும். இவர்களிடத்து பேசுகையில் வாய்பொத்தி, மெய்நடுங்கி,தலைதாழ்த்தி குற்றமில்லாது தெளிவாகப் பேச வேண்டும். ஆசாரக் கோவை சான்றோரிடத்து நாம் நடந்து கொள்ளும் முறைகளாக அறிவுறுத்துகின்றது.

**தூய்மையின் அவசியத்தை வலியுறுத்தல்**

நோய்க்கு அடிப்படைக் காரணியாக இருப்பது சுகாதாரமின்மை என்கிற நிலை. நோய்களை நீரின் மூலம் பரவும் நோய்கள், காற்றின் மூலம் பரவும் நோய்கள், எச்சில் மூலம் பரவும் நோய்கள் என பல நிலைகளில் வகைப்படுத்தலாம். இவற்றுள் எச்சில் மூலமும் நீர் மூலமும் பரவும் நோய்களே மிகுதி. இவற்றை நன்கு உணர்ந்த அனுபவவாதிகள் ஆசாரங்களை வகுத்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதை, அறிவுடையார் புல்லின் மீதும், பயிர் நிலத்தும், பசுவின் சாணத்தின் மேலும், சுடுகாட்டிலும், வழியிலும், தண்ணீரிலும், ஆலயங்களிலும், நிழலுள்ள இடத்திலும், சாம்பலிலும் ஆகிய பத்து இடங்களில் எச்சில்

உமிழ்தலையும், மலசலங்கழித்தலையும் செய்ய மாட்டார். என குறிப்பிடுவது கொண்டு உணரலாம்.

புல், பைங்கூழ், ஆப்பி, சுடலை, வழி, தீர்த்தம்,
தேவகுலம், நிழல், ஆன் நிலை, வெண்பலி, என்று
ஈர்-ஐந்தின்கண்ணும், உமிழ்வோடு இரு புலனும்
சோரார்-உணர்வு உடையார். (ஆ.கோ. 32)

**முடிவுரை**

இந்நூலில் வரும் பாக்கள் பலவற்றில் 'முந்தையோர்கண்ட முறை', 'யாவரும் கண்ட நெறி', 'பேரளிவாளர் துணிவு', 'நல்லறிவாளர் துணிவு' என்பன போன்ற தொடர்கள், இந்நூற் கருத்துக்கள் அறிஞர் பலர் தம் அனுபவத்தால் ஆராய்ந்து சொல்லியவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இந்நூலில் கூறப்பட்ட ஆசாரங்கள் பெரும்பான்மையும் வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்டவை என்றாலும் தனிமனிதனுக்கு நன்னெறிகளை எடுத்துரைப்பதாக விளங்குகிறது. ஒரு வகையில் நோய்க் காரணிகளைக் கண்டறிந்து நீக்கும் சுகாதார நூலாகத் திகழ்கிறது.

**பார்வை நூல்கள்**


1. அறவாணன் க. ப., 2008, அற இலக்கியக் களஞ்சியம், மாணவர் மறுத்தோன்றி பதிப்பகம், சென்னை.
2. ஆசாரக்கோவை, 1971, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை
3. இராமசுப்பிரமணியம் வ. த., (உ. ஆ), 2009, பதினெண்கீழ்கணக்கு நூல்கள், செல்லப்பா பதிப்பகம், மதுரை.
4. கணபதி ரா. (தொ.ஆ), 1996, தெய்வத்தின் குரல்(தொகுதி 3), வானதி பதிப்பகம், சென்னை.
5. கிருட்டிணன் ஆ.,1992, தமிழர் பண்பாட்டியல்(தொகுதி — 1), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
6. சிற்பி பாலசுப்பிரமணியம், 2014, நீல பத்மநாபன், புதிய தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி.

7. திருநாவுக்கரசு க.த., 1971, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

8. புலவர் குழந்தை, 2009, நீதிக் களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை.

9. மாணிக்கவாசகன் ஞா, 2003, திருமூலர் திருமந்திரம், உமா பதிப்பகம், சென்னை.

10. முனுசாமி வீ,(உ.ஆ) 1989, திருக்குறள், வானதி பதிப்பகம், சென்னை.

11. ராஜ் கௌதமன், 2008, தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், விடியல் பதிப்பகம், கோவை.

12. https://www.jeyamohan.in/26673/#.Way1fTXhXIU

*References*

1. Aravanan K. P., 2008, *Ara Ilakkiya Kalanjiyam* (Repository of Didactic Literature), Manavar Marutthonri Pathippagam, Chennai.

2. *Aasarakkovai*, 1971, Tirunelveli South India Saiva Siddhanta Works Publishing Society, Ltd., Chennai.

3. Ramasubramaniam V. T. (Ed.), 2009, *Pathinenkeezhkanakku Noolgal* (The Eighteen Minor Works), Chellappa Pathippagam, Madurai.

4. Ganapathi R. (Comp.), 1996, *Deivathin Kural* (Voice of the Divine) — Vol. 3, Vanathi Pathippagam, Chennai.

5. Krishnan A., 1992, *Tamizhar Panpattiyal* (Tamil Cultural Studies) — Vol. 1, Manivasagar Pathippagam, Chennai.

6. Sirpi Balasubramaniam, 2014, *Neela Padmanabhan: Pudhiya Tamil Ilakkiya Varalaru* (New History of Tamil Literature), Sahitya Akademi, New Delhi.

7. Thirunavukkarasu K. T., 1971, *Thirukkural Neethi Ilakkiyam* (Thirukkural: Literature of Ethics), University of Madras, Chennai.

8. Pulavar Kuzhandhai, 2009, *Neethi Kalanjiyam* (Repository of Ethics), Saradha Pathippagam, Chennai.

9. Manickavasagan G., 2003, *Thirumoolar Thirumandiram*, Uma Pathippagam, Chennai.

10. Munusamy V. (Ed.), 1989, *Thirukkural*, Vanathi Pathippagam, Chennai.

11. Raj Gowthaman, 2008, *Tamil Samuthayathil Aramum Aatralum* (Ethics and Power in Tamil Society), Vidiyal Pathippagam, Coimbatore.

12. https://www.jeyamohan.in/26673/#.Way1fTXhXIU

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com